# சிறுமைப்படுத்தாதிருப்பேன்

**உன்னை நான் சிறுமைப்படுத்தினேன்.**

**இனி உன்னை சிறுமைப்படுத்தாதிருப்பேன்.** நாகூம் 1 : 12

ஆம் – இல்லை – காத்திரு

100 – கிராம ஊழியம் பத்திரிக்கை வாசகர்கள் அனைவருக்கும் என் அன்பின் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பர்களே, தேவனுடைய சமூகத்தில் ஒரு காரியத்திற்காக ஜெபிக்கும்பொழுது, மூன்று விதத்தில் கர்த்தருடைய பதில் வெளிப்படுகிறது.

ஆம் : – பொதுவாக நாம் ஜெபிக்கும் காரியத்திற்கு பதில் உடன் கிடைத்துவிட்டால் மிகவும் சந்தோஷப்படுகிறோம்.

இல்லை :– அதற்குப் பதிலாக, இல்லை என்று பதில் வந்தால் மிகவும் கவலைப்படுகிறோம்.

காத்திரு :– என்று பதில் வந்தால் பதஷ்டப்படுகிறோம்.

நம்மில் பலர் " ஆம்" – என்று பதில் வந்தால் தான் கர்த்தர் கேட்டுள்ளார் என நினைக்கிறோம். அதற்காக போராடி ஜெபிக்கிறோம்.

வேதம் சொல்கிறது, கேளுங்கள். அப்பொழுது உங்களுக்கு கொடுக்கப்படும். நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்டாலும் நான் அதைச் செய்வேன். என்பதாக. ஆனால் இதே நேரத்தில் கீழ்க்கண்ட வசனத்தை மறந்து போகக்கூடாது.

நாம் எதையாகிலும், அவர் சித்தத்தின்படி கேட்டால் அவர் செவி கொடுக்கிறாரென்பதே, அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம் என்பதாகும்.

சித்தமில்லாதவைகளை, நாம் அறியாதபடிக் கேட்டால் தேவன் "இல்லை" என்றே பதில் சொல்வார். சில காரியங்களை நாம் பெறுவதற்கு தகுதி பெறும் வரை, காத்திருக்கும்படி சொல்வார். ஆதலால் சோர்ந்து போகவேண்டாம். **கர்த்தர் சொல்கிறார் ...**

"**இனி உன்னை சிறுமைப்படுத்தாதிருப்பேன்**" – என்பதாக. ஆமென்.

கர்த்தருக்கு சித்தமில்லாதவைகளை மீண்டும், மீண்டும் கேட்டால் சில நேரங்களில் தந்துவிடுவார்.

**வேதம் சொல்கிறது** அவர்கள் கேட்டதைக் கொடுத்தார்.
அவர்கள் இருதயத்திலோ இளக்கரிப்பை அனுப்பினார் – என்பதாக. சகோதரனே, சகோதரியே உனக்கு இளக்கரிப்பு வேண்டாம். கர்த்தாவே உம்முடைய சித்தத்தின்படி நடத்தும் என்று உண்மையாக நீங்கள் ஜெபித்தால், கர்த்தர் ஆம் என்றாலும் ஸ்தோத்தரியுங்கள். இல்லை என்றாலும் ஸ்தோத்தரியுங்கள். காத்திரு என்றாலும் ஸ்தோத்தரியுங்கள்.

**எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரம் செய்யுங்கள். அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்து தேவனுடைய சித்தமாயிருக்கிறது.** 1 தெச 5 : 18

"இல்லை" – என்று பதில் வரும்பொழுது மிகவும் உற்சாகத்துடன் கர்த்தரைத் துதியுங்கள். ஏனெனில், "தேவனிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்கு, சகலமும் நன்மைக்கேதுவாகவே நடக்கிறது" என் நினைவுகள், உங்கள் நினைவுகள் அல்ல என்று கர்த்தர் கூறுகிறார். நமக்கு நல்ல திட்டமாக, தெரிகிற சில காரியங்கள் தேவனுக்கு முன்பாக அருவருப்பாக தெரிகிறது. அப்பொழுது நம்முடைய எண்ணத்தையும், திட்டத்தையும் அப்படியே அழித்துப் போடுகிறார். காரணம் என்ன ? "அவர் நம் மேல் வைத்த அன்பு"

சில நேரங்களில், மாதக்கணக்கில், வருடக்கணக்கில் நாம் காத்திருக்க வேண்டியதிருக்கும். ஒன்று நாம் அதைப் பெறுவதற்கு தகுதி பெறும்படியாக, மற்றொன்று, நம்முடைய கண்ணீர் ஜெபம் அவருடைய துருத்தியை நிரப்பும்படியாக.

பரலோகத்தில் நம்முடைய ஒவ்வொரு காரியத்தின் நிறைவேறுதலுக்காகவும், ஒரு துருத்தி வைக்கப்பட்டுள்ளது. அது நிரம்பும் பொழுது காரியம் ஜெயமாக மாறும். அது வரையிலும் கட்டாயமாக காத்திருந்தே ஆகவேண்டும்.

**சங்கீதக்காரன் சொல்கிறான்.** "என் கண்ணீரை உம்முடைய துருத்தியில் வையும் அவைகள் உம்முடைய கணக்கில் அல்லவோ இருக்கிறது" – என்பதாக.

இதை வாசிக்கும் அன்பரே,

உங்கள் ஜெபத்திற்கு ஆம் அல்லது இல்லை அல்லது காத்திரு என்று என்ன பதில் வந்தாலும், கர்த்தர் பதில் கொடுத்துவிட்டாரென்று அறிக்கையிட்டு கர்த்தரைத் துதியுங்கள். "**இனி உன்னை சிறுமைப்படுத்தாதிருப்பேன்.**" – ஆமென்.